புரட்சிப்

# பெரியார் முழக்கம்



திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஏப்ரல் 24, 2025 • புரட்சி 25 • முழக்கம் 15 • விலை ரூ.3.00

# எழுச்சியுடன் நடந்த கழக ஆர்ப்பாட்டம்

## காஞ்சியில் சங்கராச்சாரிகளின் முகமூடி கிழிப்பு!

பெரியார் மீது ஆதாரமற்ற அவதூறுகளை அள்ளி வீசிய பார்ப்பனக் கைக்கூலிகளுக்கு பதிலடி தரும் வகையில் இந்த ஆர்ப்பாட்டங்களை திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தி, பார்ப்பன சங்கராச்சாரிகளின் பார்ப்பன முகமூடியைக் கிழித்துக் காட்டியது.

பெரியார் மீது கைவைத்தால் சங்கரச்சாரிகளை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்துவோம் என்று திராவிடர் விடுதலைக் கழகம் களம் இறங்கியது. குறிப்பாக சங்கரமடம் உள்ள காஞ்சிபுரத்தில் 21.04.2025 மாலை 5 மணியளவில் பேருந்து நிலையம் அருகே எழுச்சியுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் தனி பேருந்தில் காஞ்சிபுரம் வந்து ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.



காஞ்சி விஜயேந்திரன் கடந்த ஜனவரி 19 அன்று பெங்களூரில் 'பிராமணர்கள்' மாநாட்டில் இந்து சமூகத்தில் சூத்திர, பஞ்சமர்களிடம் இருந்து பிராமணர்கள் விலகி தங்களது மேலாண்மையைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற இன ஒதுக்கல் கருத்தை இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராகப் பேசி இருந்தார். சூத்திர, பஞ்சமர்கள் அடிமைப்பட்டவர்கள் என்ற மனுதர்மம் விதிக்கும் கோட்பாடுகளுக்கு உயிரூட்டுவதே அவரது பேச்சின் நோக்கமாகும். கடும் தண்டனைக்குரிய இந்த பேச்சை ஊடகங்கள் கண்டுகொள்ளவில்லை, இருட்டடிப்புச் செய்துவிட்டன. இதைக் கண்டித்து மாவட்டந்தோறும் ஆர்ப்பாட்டங்களை நடத்த மயிலாடுதுறையில் மார்ச் 22-ஆம் தேதி கூடிய கழக மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




காஞ்சிபுரத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் பங்கேற்று, காஞ்சி சங்கராச்சாரிக்கு கடும் கண்டனத்தை தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்திற்கு காஞ்சிபுர மாவட்டக் கழகத் தலைவர் கா.ரவிபாரதி தலைமையேற்று நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். தோழர்கள் உலக ஒளி, சம்பத்குமார் பெரியார் குறித்த பாடல்களைப் பாடினர்.

தொடர்ந்து, உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்), இரா.சிவா (மாவட்டச் செயலாளர்), தி.வ எழிலரசு (தெற்கு மாவட்டத் தலைவர் விசிக), ஜெசி (மக்கள் மன்றம்), மதி ஆதவன் (மாநகர் மாவட்டச் செயலாளர் விசிக), காஞ்சி அமுதன் (செயலாளர் தமிழ் உரிமைக் கூட்டமைப்பு), புதுவை தீனா (பெரியார் சிந்தனையாளர் இயக்கம்), பாசறை செல்வராஜ் (முன்னாள் மாவட்டச் செயலாளர் விசிக), சாரதா தேவி (மாவட்டச் செயலாளர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை), நாத்திகம் நாகராஜ் (அறிவு வளர்ச்சி மன்றம்), சரவணன் (மக்கள் அதிகாரக் கழகம்) ஆகியோர் கண்டனவுரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் நிறைவுரையாற்றிய கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், இந்திய அரசியலையும், சமூக அமைப்பையும் பார்ப்பனர்கள் இப்போதும் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துள்ளார்கள் என்பதை பல்வேறு வரலாற்றுத் தகவல்களுடன் எடுத்துரைத்தார். பெங்களூரில் காஞ்சி விஜயேந்திரன் இந்து மதத்திற்கு ஆதரவாகப் பேசவில்லை, மாறாக நமக்கான மதம் வேத மதம்தான். அதை பிராமணர்களால் மட்டுமே காப்பாற்ற முடியும். பிராமணியம் அழிந்துவிட்டால் வேத மதம் அழிந்து விடும் என்று பேசியதை கவனிக்க வேண்டும்.

இந்துக்கள் என்ற போர்வையில் பெரும்பான்மை சூத்திரர்கள், பஞ்சமர்கள் மீது பார்ப்பனிய ஆதிக்கத்தைக் திணிக்கும் முயற்சிகளே நடந்து கொண்டிருக்கின்றன. பெரும்பான்மை மக்கள் சாப்பிடும் அசைவ உணவு, இந்து கலாச்சாரத்திற்கு எதிரானது என்ற கருத்தைக் கட்டமைக்கிறார்கள்.

வடநாட்டில் இந்து பண்டிகை நாட்களில் மாமிச உணவு கடைகளை மூடச் சொல்கிறார்கள். புதிய நாடாளுமன்ற கட்டடத் திறப்பு விழாவிலும் ராமர் கோயில் திறப்பு நிகழ்ச்சியிலும் குடியரசுத் தலைவர் ஒரு பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த கணவனை இழந்த பெண் என்பதால் அழைப்பு விடுக்காமல் அவமதிக்கிறார்கள். வேத மந்திரங்களுடன் அரசு விழாக்கள் நடத்தப்படுகின்றன.

குஜராத் கலவரத்தில் பில்கேஸ் பானு குடும்பத்தினர் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அந்த குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையிலிருந்து முன் விடுதலை அறிவித்தது குஜராத் பாஜக ஆட்சி. குற்றம்சாட்டப்பட்ட அனைவரும் 'பிராமணர்கள்' என்பதால் அவர்கள் கொலைகளையோ, பாலியல் வன்முறைகளையோ செய்திருக்க மாட்டார்கள் என்று அதற்குக் காரணம் கூறினார்கள்.

பழனி முருகன் கோயிலில் பிற மதத்தவரை அனுமதிக்கக் கூடாது என்று அறிவிப்புப் பலகையை கோயில் கொடிமரத்தில் எழுதித் தொங்கவிட வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்றக் கிளை தீர்ப்பு வழங்கியது. சொல்லப்போனால் பழனி கோயிலுக்கு கொடி மரமே கிடையாது. எச்சில் இலை மீது உருண்டு பிரார்த்தனை செய்வதை தடை செய்ய முடியாது என்று இதே நீதிமன்றம் உச்ச நீதிமன்றத்தின் தடையை மீறி தீர்ப்பு வழங்கியது.

சென்னையில் பார்ப்பனர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி தங்களை 'பிராமணர்கள்' என்றே அழைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்கள். பார்ப்பனர்களை 'பிராமணர்கள்' என்று அழைத்தால் ஏனைய பார்ப்பனர் அல்லாத மக்கள் இயல்பாகவே சூத்திதர்களாக அடையாளமாகிவிடுகிறார்கள். அதில் பேசிய கஸ்தூரி என்ற 'பார்ப்பன' நடிகை முதல்வர் குடும்பத்தை தெலுங்கர்கள் என்றும் அரசர்களுக்கு அந்தரங்க சேவை செய்ய வந்தவர்கள் என்றும் இழிவாகப் பேசி தனது 'பார்ப்பனிய'த் திமிரை வெளிப்படுத்தினார். இவருக்கு பிணை வழங்க வேண்டும் என்று மதுரை கிளை உயர்நீதிமன்ற பார்ப்பன நீதிபதி ஜி.ஆர் சுவாமிநாதன் மனைவி அறிக்கை வெளியிட்ட விசித்திரமும் நடந்தது. பெரியார் சிலையை உடைக்க வேண்டும் என்று பேசிய 'பார்ப்பனர்' எச். ராஜா அதற்காக ஆறு மாதம் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு, இப்போது பிணையில் இருக்கிறார்.

ரெங்கராஜ நரசிம்மன் என்னும் வைணவ வேத பண்டிதர் சூத்திரர்கள் அர்ச்சகர் ஆக வேதம் இடம் தரவில்லை என்று பேட்டி கொடுக்கிறார். துணை முதலமைச்சர் உதயநிதி பார்ப்பனர்களை எதிர்த்துப் பேசியதற்காக 'பிராயச்சித்தம்' செய்ததாக அப்பட்டமாகப் பொய் கூறினார். இதை என்னிடம் ஒரு வேத பண்டிதர் கூறியதாக, அவரது பேச்சை எடிட் செய்து திரித்து வெளியிட்டு அதற்காக கைது செய்யப்பட்டு பிணையில் இருக்கிறார்.

குலக்கல்வித் திட்டத்தை விஸ்வகர்மா என்ற பெயரில் ஒன்றிய ஆட்சி இந்தியா முழுவதும் திணித்துள்ளது. ராமர் கோயிலில் பிரதமர் மோடி ராமன் சிலையை சுமந்து செல்வார் என்ற செய்திகள் வந்தவுடன், சிருங்கேரி மற்றும் துவாரகைபீட சங்கரச்சாரிகள் 'பிராமணர்' அல்லாத மோடிக்கு அந்த உரிமை இல்லை என்று கூறி ராமர் கோயில் திறப்பு விழாவைப் புறக்கணித்தனர்.

ராஜஸ்தான் சட்டமன்ற காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு தலித். மூன்று முறை அந்தத் தொகுதியில் இருந்து தேர்வு செய்யப்பட்டவர். தனது தொகுதியில் உள்ள ஒரு அனுமார் கோயிலுக்குள் ராமநவமி விழாவுக்கு சென்றதற்காக மாநில பாஜக முன்னாள் தலைவர் கோயிலுக்குள் கங்கை நீரை தெளித்துத் தீட்டுக் கழித்து அதை வீடியோவாக முகநூலில் வெளியிட்டார். நாட்டில் நடப்பது மனு சாஸ்திர ஆட்சியா என்று ராகுல் காந்தி கண்டித்தார்.

ஒன்றிய அரசின் அதிகார மையங்கள் அனை த்திலும் ஆர்எஸ்எஸ் பார்ப்பன அதிகாரிகளே மய்யம் கொண்டுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் வெளிவருகின்றன. மீண்டும் வேத கால பார்ப்பன ஆட்சியை உறுதிப்படுத்த வேண்டும் என்று இப்போது காஞ்சி விஜயேந்திரனும் பேசியுள்ளார்.

பெரியார் ஒரு போதும் இனவாதம் பேசவில்லை. அவர் சமூக நீதி, சமத்துவம் பேசினார். பார்ப்பனர்கள் கூட்டத்திலேயே பேசிய பெரியார் உங்களுடைய ஆதிக்கத்தை கைவிட முன்வாருங்கள் சமத்துவமாக நாம் வாழ முடியும் என்று பல முறை வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆனால் பார்ப்பனர்கள்தான் இந்த செயற்கை நுண்ணறிவு காலத்திலும் 'இன ஒதுக்கலையும், வெறுப்பையும்' சக மனிதர்கள் மீது திணித்து வருகிறார்கள் என்று விடுதலை ராசேந்திரன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில், ஆதிசங்கரர் நிறுவிய மடம் காஞ்சி மடம் அல்ல என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளை எடுத்து வைத்தார். ஆதிசங்கரர் நிறுவிய ஏனைய நான்கு மடங்களும் காஞ்சி மடத்தை அங்கீகரிக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

பார்ப்பனியத்தையும் வேதங்களையும் எதிர்த்து பெரியார் பிரச்சாரம் செய்வதைக் கண்டு பயந்து அதை முறியடிக்க, சந்திரசேகரேந்திர சரஸ்வதி எத்தகைய திட்டங்களை வகுத்தார் என்று அக்கினிஹோத்திரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் 'இந்து மதம் எங்கே போகிறது' என்ற நூலில் பதிவு செய்த கருத்துக்களை எடுத்துக்காட்டினார். வழிபாடுகள், சடங்கு முறைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை சட்டத்தின் பிடியில் இருந்து விடுவித்து வைதீக வழியில் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக சுதந்திரம் வருவதற்கு முன்பிருந்தே எடுத்துக்கொண்ட தீவிர முயற்சிகளை தாத்தாச்சாரியார் எழுதிய நூலில் இருந்து எடுத்துக்காட்டினார். இந்த தாத்தாச்சாரியார் சங்கராச்சாரியின் செயலாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கு சொத்துரிமை வழங்கும் சட்டம் வந்தபோது கதறி அழுத சீனியர் சங்கராச்சாரி அதற்காக பார்ப்பனப் பெண்களைக் கூட்டி தங்களுக்கு சொத்துரிமை வேண்டாம் என்று தீர்மானங்கள் நிறைவேற்றியதையும் தாத்தாச்சாரி நூலிலிருந்து எடுத்துக்காட்டினார். கோயில் நுழைவுப் போராட்டத்தை தடுத்து நிறுத்த பார்ப்பனப் பெண்களை திரட்டி, போராட்டக்காரர்கள் கண்களில் மிளகாய் பொடியைத் தூவும் வன்முறையில் இறங்கச் செய்தவர் சங்கராச்சாரி.

காந்தியைக் கொலை செய்த ஆர்எஸ்எஸ் அமைப்பின் மீதான தடையை நீக்குவதற்கு சங்கராச்சாரி செய்த திரைமறைவு முயற்சிகளையும் விடுதலை இராசேந்திரன் விளக்கினார். மத வழிபாடுகள், சடங்குகள், பழக்க வழக்கங்களில் சட்டம் தலையிட முடியாது என்று சட்டத்தில் சூழ்ச்சிகரமாகத் திணித்த பிரிவுகள்தான் இப்போதும் அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதற்கும், கோயில்களைப் பார்ப்பன மேலாண்மையில் நிலைநிறுத்தி வைப்பதற்கும் பெரும் பாதுகாப்பாக நிற்கின்றன.

இந்த வரலாற்று உண்மைகளை எல்லாம் மறைத்து பார்ப்பனியம் வலுவிழந்து விட்டதுபோல் ஒரு பொய்யான தோற்றத்தை சித்தரித்துக் கொண்டு இருக்கிறார்கள். பெரியாரிஸ்டுகள் இந்த உண்மைகளை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தி உண்மையான எதிரிகளை நிச்சயம் அடையாளம் காட்டுவார்கள். பெரியாரைத் தமிழ்நாட்டில் இருந்து அப்புறப்படுத்தினால் மட்டுமே தமிழ்நாட்டில் பார்ப்பன மேலாண்மை மதவாத ஆட்சியை நிறுவ முடியும் என்ற கற்பனைகளில் மிதக்கிறார்கள். இந்த முயற்சிகளை முறியடித்துக் காட்டுவோம். தோற்கப்போவது பார்ப்பனியம்தான் என்றார் விடுதலை இராசேந்திரன்.

### தலையங்கம்

# மாற்றங்களுக்கு முகம் கொடுத்த ‘போப் பிரான்சிஸ்’!

கத்தோலிக்க திருச்சபையின் தலைமை மதகுரு போப் பிரான்சிஸ் தனது 88-வது வயதில் நீண்ட மருத்துவப் போராட்டத்திற்கு பிறகு விடைபெற்றுக்கொண்டார்.

நம்மை பொறுத்தவரை மதங்கள் மனித சமூகத்துக்கு கேடு விளைவிப்பவைதான். மனித சமூகத்தில் சுரண்டலுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் கலவரங்களுக்கும் ஊற்றுக் கண்களாகவே மதங்கள் இருக்கின்றன. கடவுளை விட மதங்கள்தான் ஆபத்தானவை என்று பெரியார் கூறினார். அனைத்துக் கடவுளும் ஒன்றுதான் என்பதை மதவாதிகள் ஏற்றுக்கொள்ளவார்கள். அனைத்து மதங்களும் ஒன்றுதான் என்பதை ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். மதத்தின் பெயரால் சிந்தப்பட்ட குருதிகளை வரலாறுகள் உணர்த்திக்கொண்டு இருக்கின்றன. ஆனாலும் மதங்களின் நாடுகள் உலக வரைபடத்தில் இருக்கவே செய்கின்றன. காலத்தின் மாற்றங்களை கருத்தில்கொள்ள மறுத்து பிடிவாதம் காட்டும் மதக் கருத்தியல்வாதிகள் நிறைந்த உலகில் போப் பிரான்சிஸ் சீர்த்திருத்தங்களுக்கு முகம் கொடுத்து இருக்கிறார் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

●2019-ல் ஐக்கிய அரபு அமீரகம் சென்று, கத்தோலிக்க-இஸ்லாமிய உறவுகளை வலுப்படுத்தினார்.
●‘திருச்சபை ஏழைகளுக்கானது’ என்ற கொள்கையை வலியுறுத்தி, உலகளாவிய ஏழ்மை எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.
●ஐரோப்பாவின் அகதி நெருக்கடியின்போது, ‘வெளியேறியவர்களை வரவேற்கவும்’ என்று கத்தோலிக்கர்களைக் கேட்டுக்கொண்டார்.
●குருமார்களின் பாலியல் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்தார்.
●குழந்தைகள் மீதான அத்துமீறல்கள் செய்த குருமார்களுக்கு எதிராக கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்தார்.
●திருச்சபை நிர்வாகத்தில் பெண்களுக்கு அதிக பதவிகள் வழங்கினார்.
●கணவனை இழந்த பெண்கள் குருமார்களாக அனுமதி வழங்கினார்.
●காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை கடுமையாக விமர்சித்தார்.
●“பூமி என்பது நமது பொதுவான வீடு” என்று அறிவித்தார்.
●2020-இல் “பிரதர்ஸ் டுட்டி”: அனைத்து மனிதர்களும் சகோதரர்கள் என்ற கருத்தை வலியுறுத்தினார்.
●2023-இல் ஹோமோசெக்சுவல் (தன்பாலின) உறவுகளைக் குற்றமாகக் கருதும் சட்டங்களை எதிர்த்தார்.
●2022-இல் கனடாவின் பழங்குடி குழந்தைகள் மீதான கத்தோலிக்க திருச்சபையின் கொடுமைகளுக்கு மன்னிப்பு கேட்டார்.
●கொலம்பியா மற்றும் மெக்சிகோ போன்ற நாடுகளில் நிகழ்ந்த வன்முறை மற்றும் கொலைகளுக்கு மன்னிப்பு கேட்டார்.

“ஒரு திருச்சபை எப்போதும் முன்னேற வேண்டும், தவறுகளை ஒப்புக்கொண்டு சரிசெய்ய வேண்டும்” என்பதே அவரது கேட்பாடாக இருந்தது. அவரது பரிவுள்ள திருச்சபை (Church of Mercy) என்ற தத்துவம் உலகளவில் பலரின் மதிப்பைப் பெற்றுள்ளது.

ஆனால் இந்தியாவில் ‘இந்து மதமே நமது தாய் மதம்’ என்று கூறுகிறவர்கள் வர்ணாஸ்ரம, ஜாதி பாகுபாடுகளைக் கடந்து மனிதர்களாவோம் என்று கூறுகிறார்களா? எந்த சங்கராச்சாரியாவது மானுட ஒற்றுமையைப் பேசுகிறார்களா?

பெண்களைப் பாகுபடுத்தும் மத கோட்பாடுகளையும் புனித நூல்களையும் விலக்கி வைப்போம் என்று பேசுகிறார்களா? கோயில் கருவறையில் அனைத்து இந்துக்களுக்கும் அர்ச்சனை செய்யும் உரிமையை ஏன் தடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்? இந்துக்களுக்கு ஜாதி தடையில்லை அனைத்து இந்துக்களும் ஜாதி கடந்து திருமணம் செய்துகொள்ளலாம் என்பதை ஏற்கிறார்களா? இப்போதும் பிராமணர்களுக்கு தனி குடியிருப்பு வேண்டும், தனி ஆச்சாரம் வேண்டும் என்று வெளிப்படையாகப் பேசுகிற சங்கராச்சாரிகள் இருக்கத்தானே செய்கிறார்கள்? சமூக மாற்றங்களுக்கு முகம் கொடுக்காமல் வேத காலத்து பழமைகளுக்கு புத்துயிர் ஊட்டவே இவர்கள் துடித்துக்கொண்டு இருப்பது வெட்கக்கேடு அல்லவா...

பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்ற அறிவியலை கண்டுபிடித்த கலிலியோவை 1633-ஆம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபை மன்னிப்பு கேட்கச் சொன்னது. அதே திருச்சபை 2000-ஆம் ஆண்டு போப் 2-ஆம் ஜான் காலத்தில் இழைத்த தவறுக்காக மன்னிப்பு கேட்டது என்பது வரலாறு.

19, 20-ஆம் நூற்றாண்டுகளில் ஆஸ்திரேலிய பழங்குடி மக்கள் மீதான அநீதிகளுக்கு 2008-ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய அரசு மன்னிப்பு கேட்டது. வதை முகாம்களில் 60 இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்டதற்கு ஜெர்மனி தொடர்ந்து மன்னிப்பு கேட்டு வருகிறது. இத்தகைய மன்னிப்புகள் மதங்களுக்கிடையேயான காயங்களுக்கு மருந்து போட்டன. ஆனால் தீண்டப்படாதவர்களையும், சூத்திரர்களையும் பெண்களையும் அவமதித்து பாகுபடுத்தி அவமதித்து வருவதற்கு மன்னிப்பு கேட்டார்களா? மாறாக இந்த அவலங்கள் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகவே துடித்துக் கொண்டு இருக்கிறார்கள். கேள்வி கேட்டாலே மதத்தைப் புண்படுத்துவதா? என்று கூக்குரல் இடுகிறார்கள்.

எந்த மதக் கோட்பாடுகளிலும் நமக்கு உடன்பாடில்லை. ஆனால் மாற்றங்களுக்கும் முகம் கொடுப்பதை வரவேற்க வேண்டும். ஏனைய மதங்களைப் போல் கிறித்துவமும் பெண்களுக்கு சம உரிமையை மறுக்கிறது. எனினும், காலத்தின் மாற்றம் கருதி சீர்த்திருத்தங்களை ஏற்றுக்கொண்ட போப் பிரான்சிஸ் முயற்சிகள் எதிர்காலத்தில் மேலும் சீர்த்திருத்தங்களுக்கு வழிவகுக்கும் என்ற பார்வையில் வரவேற்கிறோம்.

# உண்மைக்கு அஞ்சும் கோழைகள்!

*சமூக சீர்திருத்தவாதிகள் ஜோதிராவ் புலே மற்றும் சாவித்திரிபாய் புலே வாழ்க்கை வரலாற்றை வைத்து எடுக்கப்பட்டுள்ள திரைப்படம் புலே. இந்தத் திரைப்படத்தை ஏப்ரல் 11-ஆம் தேதி வெளியிடத் திட்டமிட்டிருந்தது படக்குழு. இந்த நிலையில், திரைப்படத் தணிக்கை வாரியம், படத்தின் பல காட்சிகளுக்கு ஆட்சேபனை தெரிவித்து உரையாடல்களை நீக்க வலியுறுத்தியுள்ளது. இதனால் திரைப்படம் ஏப்ரல் 25-ஆம் தேதிக்குத் திரையிடத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.*

*மையமாக, படத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒடுக்கப்பட்டார்கள், ‘மஹர், மாங், பேஷ்வா என சாதிப் பெயர்களைக் குறிப்பிடக்கூடாது. மூன்றாயிரம் ஆண்டுகள் அடிமைத்தனம் என்றெல்லாம் குறிப்பிடக்கூடாது’ எனப் பல இடங்களில் உரையாடல்களை நீக்கச் சொல்லி வலியுறுத்தி இருக்கிறார்கள். படத்தின், முன்னோட்டக் காட்சிகளில் பார்ப்பன ஒடுக்குமுறைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில், திரைப்பட வாரியத்தின் இந்தப் போக்கு குறித்து இயக்குநர் அனுராக் காஷ்யப் “இந்த சாதிய, இன வெறி அரசாங்கம் கண்ணாடியில் தங்கள் முகத்தைப் பார்க்க வெட்கப்படுகிறது” என்று விமர்சனம் செய்துள்ளார்.*

*“எது அவர்களைத் தொந்தரவு செய்கிறது என்பதை வெளிப்படையாகச் சொல்ல முடியாத கோழைகள்” என்று குறிப்பிட்டுள்ள அவர், “முன்பு தாடக்- 2 படத்துக்குப் பிரச்சினை செய்து, இந்தியாவில் சாதி அமைப்பை மோடி ஒழித்து விட்டார் என்று கூறினார்கள், இங்கே சாதி அமைப்பு இல்லை என்றால், ஏன் பிராமணர்கள் புலே திரைப்படத்தின் மீது கோபம் கொள்கிறார்கள்? சாதி அமைப்பு இல்லை என்றால், ஏன் ஜோதிராவ் புலே சாவித்திரிபாய் புலே இன்னும் பேசுபொருளாக இருக்கிறார்கள்?” என்று கேள்வி எழுப்பி இருந்தார்.*

*இந்த விமர்சனத்துக்காக அனுராக் கடுமையாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளார். அவரது மகள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், சக ஊழியர்களுக்குப் பாலியல் வன்கொடுமை மற்றும் கொலை மிரட்டல்கள் தொடுக்கப்பட்டுள்ளன. உண்மையை எதிர்கொள்ளமுடியாத அரசு, மதவெறி கும்பல்களுக்கு எதிராகவும் அனுராக் காஷ்யப் மற்றும் புலே திரைப்படத்துக்கு ஆதரவாகவும் சமூக வலைத்தளங்களில் பெருகும் ஆதரவு நம்பிக்கை அளிக்கிறது.*

*-நன்றி முரசொலி*

# ஆட்சிக்கு மதச்சாயம் பூசலாமா? அமைச்சரே?

*தமிழ்நாட்டில் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்படுமா? என்று திமுக சட்டமன்ற உறுப்பினர் எழிலன் சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பினார். இதற்கு சட்ட அமைச்சர் ரகுபதி பதிலளிக்கையில், மூடநம்பிக்கை மக்களுக்கு நம்பிக்கையாக இருக்கிறது. எனவே, சட்டம் கொண்டு வர முடியாது என்று பதில் அளித்துள்ளது வன்மையான கண்டனத்திற்கு உரியது. துணைவேந்தர்கள் மாநாட்டில் பேசிய தமிழ்நாடு முதல்வர் பகுத்தறிவும் அறிவியலும் பாடத்திட்டத்தில் முதன்மையாக இருக்க வேண்டும் என்று பேசி உள்ளார்.*

*இந்திய அரசியல் சட்டம் அறிவியல் மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்று கூறுகிறது. மகாராஷ்டிரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் அமலில் இருக்கிறது.*

*கலைஞர் முதல்வராக இருந்தபோது பேராசிரியர் நன்னன் தலைமையில் ‘மூடநம்பிக்கை ஒழிப்புக் குழு’ ஒன்றை உருவாக்கினார். ‘பகுத்தறிவு கலை இலக்கிய மன்றம்’ திமுகவின் ஒரு அணியாக செயல்பட்டு வருகிறது. இவை எல்லாவற்றையும் புறந்தள்ளி விட்டு ஏற்கெனவே ராமன் சமூக நீதியின் சின்னம் என்று பேசிய அமைச்சர் ரகுபதி இப்போது மூடநம்பிக்கைகளை நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறார். பேரவைத் தலைவரும் இதை நியாயப்படுத்துகிறார்.*

*அதிமுகவில் இருந்து திமுகவிற்கு வந்த அமைச்சர்கள் இப்படி எல்லாம் தங்கள் பிற்போக்குக் கருத்துகளைப் பேசிக்கொண்டு ஆட்சிக்கு மதச்சாயம் பூசுவது ஆட்சியை களங்கப்படுத்துவதாகும்..*

*– விடுதலை இராசேந்திரன், பொதுச்செயலாளர்,*
*திராவிடர் விடுதலைக் கழகம்*

# சந்துரு பரிந்துரைகளை நிறைவேற்றுக!

*“அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் மாணவர்கள் சாதி அடையாளங்களைக் குறிக்கும் கயிறுகள், டீ-சர்ட்டுகளை அணிய தடைவிதித்து பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது பாராட்டி வரவேற்கத்தக்க ஒன்றாகும்.*

*கிருஷ்ணகிரி மாவட்டம் சொப்பனூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடந்த ஆண்டு விழாவில் மாணவர்கள் வீரப்பன் உருவம் மற்றும் ஒரு அரசியல் கட்சியை அடையாளப்படுத்தும் டீ-சர்ட்டுகளையும் அணிந்து திரைப்படப் பாடலுக்கு நடனமாடி உள்ளனர். பெற்றோர்களிடமிருந்து இதற்கு எதிர்ப்புகள் வந்தன.*

*இதைத் தொடர்ந்து பள்ளிக் கல்வித்துறை இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. உத்தரவை மீறிச் செயல்படும் தலைமை ஆசிரியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த உத்தரவு கூறுகிறது.*

*அரசுப் பள்ளிகளில் ஆண்டு விழா நடத்துவதற்கு அரசு 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி இருக்கிறது. அந்த விழாக்கள் இலக்கியம் மற்றும் பண்பாடுகளைப் போற்றும் விதமாக இருக்க வேண்டும் என்றும் அரசு அறிவித்துள்ளது. அதற்கு மாறாக சாதியைப் பெருமைப்படுத்தும் நிகழ்வுகள் இடம் பெறக்கூடாது என்று கல்வித்துறை அதிகாரிகள் கூறுவதாக இந்து ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.*

*மாணவர்களிடையே சாதி வெறி தலை தூக்காமல் இருப்பதற்கு தமிழ்நாடு அரசு நீதிபதி சந்துரு தலைமையில் ஒரு குழுவை அமைத்து அந்தக் குழு பல பரிந்துரைகளை அரசுக்கு வழங்கி இருக்கிறது. அந்த பரிந்துரைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். சமூக நீதி கொள்கையில் இது ஒரு முக்கிய அம்சமாகும்.*

*– விடுதலை இராசேந்திரன்,*
*பொதுச் செயலாளர்,*
*திராவிடர் விடுதலைக் கழகம்.*
*17.04.25.*

# போலித் தமிழ்தேசியர்களுக்கு மறுப்பு! புரட்சிக் கவிஞர் ‘திராவிட’ எதிர்ப்பாளரா?

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெரியார் மறுத்து திராவிடம் பேசினார் என்று “விலை போகும் தமிழ்த்தேசியங்கள்” பிதற்றி வருகின்றன. அந்த புரட்டுக்களை மறுத்து மறைந்த திராவிட இயக்கப் பெருங்கவி தமிழேந்தி ‘பாசறை முரசு’ இதழுக்கு எழுதிய கட்டுரை புரட்சிக் கவிஞர் நினைவு நாளையொட்டி வெளியிடப்படுகிறது.



“திராவிடர்’ என்ற சொல் இந்தியர் என்ற சொல்லுக்கு எதிரான பொருளிலும் அமைந்தது. மேலும் “பார்ப்பனர் அல்லாதார்’ என்ற சொல்லைப் புறந்தள்ளிய பெரியார், “நம்மைக் குறிக்கப் பார்ப்பனர் அல்லாதோர் என்கிறோம். அல்லாதார் என்பதைச் சேர்த்துக் கொள்ள நாம் என்ன நாடோடிகளா? நாம் ஏன் அல்லதோர் ஆக வேண்டும்?” என்று விளக்கம் தந்தார்.

பின் நாட்களில் “திராவிடம்’ என்பதும் “தமிழகம்’ என்பதும் ஒன்றே என்று பெரியார் அரசியல் நிலைப்பாடு எடுத்தார். பெரியாரின் கருத்துக்கு இசைவாகவே ‘திராவிடம்’ என்பதும் ‘தமிழகம்’ என்பதும் ஒன்றே எனப் பாவேந்தர் பாட்டிசைத்தார்.

**மன்னும் தமிழே திராவிடம் என்று**
**திரிந்த தென்றால் மறுப்பவர் இல்லை**
**திருத்தமிழம் எனும் செந்தமிழ்ப் பெயரை**
**வடவர் திரமிளம் என்று வழங்கினர்**
**திரமிளம், பிறகு திராவிடம் ஆனது**
**திராவிடம் இன்பத் தமிழின் திரிபன்றோ?**

என்றெல்லாம் திராவிடர் மேன்மைப் பற்றி எழுதி, பாவேந்தர் பெருமிதம் கொண்டார். திராவிடர் கழகத்தின் உடை மற்றும் கொடி ஆகியன பற்றி பெரியார் கொண்டிருந்த கருத்தையே பாவேந்தரும் கொண்டிருந்தார்.

வைகறை இருட்டையும் செங்கதிர் நகைப்பையும் திராவிடர் மணிக்கொடி குறிக்கும் வாழ்விருள் தவிர்ப்போம் தனிப்பெரும் புரட்சியை வரவேற்றல் கொடியின் நோக்கம்.

பெரியார் கொண்டிருந்த திராவிட நாட்டுப் பிரிவினைக் கோட்பாடும் பாவேந்தருக்கு உடன்பட்டானதாகவே இருந்தது என்பதைப் பின்காணும் பாட்டு வரிகள் வெளிப்படுத்தும்.

**பிறர்க்கிட மின்றித் திராவிட நாட்டைப்**
**பிரித்திட வேண்டும் இப்போதே - இதைப்**
**பின்னும் வடக்கர் சரக்கினை விற்கப்**
**பெருஞ்சந்தை ஆக்குதல் நன்றோ?**
**மீள்வது நோக்கம் - இந்த**
**மேன்மைத் திராவிடர் மீறுவதனின் நீடில்**
**மாள்வது நோக்கம் - இதை**
**வஞ்ச வடக்கர்க்கெம் வாள்முனை கூறும்**

1947 ஆகஸ்ட் 15-இல் வெள்ளையன் இந்நாட்டை விட்டு வெளியேறிய பின் மொழிவழி மாகாணக் கோரிக்கைகள் பல்வேறு பகுதிகளில் முகித்தன. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசிய தென்னாட்டிலும் இந்த முழக்கங்கள் எதிரொலித்தன. திராவிடர் ஒற்றுமையை விரும்பிய பெரியார் இதற்குக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார்.

“மொழிகளில் (சாதி, மத, இன, வேறுபாட்டு நிலை) அப்படிக் கொள்கையோ, திட்டமோ, அனுபவமோ, கலாச்சாரமோ, பழக்கவழக்கமோ மாற்றமாய் இருக்கும்படி நமக்குள் எந்த மொழியும் இல்லை. மொழியினால் பெருமை, சிறுமை, இலாப, நட்டம் ஒன்றுமில்லை. ஆதலால் இதைக் காரணம் காட்டிப் பிரித்துக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. (பெரியார் ஈ.வே. ரா. சிந்தனைகள் தொகுதி : 2, பக்.723) பெரியாரின் கருத்தையே பாரதிதாசனும் வழிமொழிகிறார்:

**கேரளம் என்று பிரிப்பதும் - நாம்**
**கேடுற ஆந்திரம் பிய்ப்பதுவும்**
**சேரும் திராவிடர் சேரா தமிழ்த்திடச்**
**செய்திடும் சூழ்ச்சி அண்ணே - அதைக்**
**கொய்திட வேண்டும் அண்ணே!**

இப்படித் தென்னக மக்களின் ஒற்றுமை பற்றிப் பேசிய பெரியார் மற்றும் பாவேந்தரின் கருத்துகள் பின்னால் எப்படி மாற்றம் பெற்றன? கேரளத்தார் ஆதிக்கம் தலைகால் தெரியாமல் வளர்ந்து, அது தமிழர்களின் உரிமைகளைக் காவு கொள்ளத் தொடங்கியதை உணர்ந்த பெரியார் மலையாளிகள் திராவிடத்திலிருந்து பிரிந்து ஒழிவதே நன்று என்று எழுதுகிறார்.

இதில் குறிப்பாகக் கூறவேண்டுமானால் மலையாளிகளின் தொல்லையோ மாபெரும் தொல்லையாகும். அவர்கள் பெரும்பாலும் ஆரிய கலாச்சாரத்தையும், ஆரியமொழியையும், ஆரிய வருணாசிரம தருமத்தையும் ஆதரிக்கிறவர்கள். அதனால் வகுப்புவாரி உரிமையில் மலையாளிகளைப் பார்ப்பனரல்லாத இந்துக்கள் என்ற பிரிவில் பார்ப்பனர்கள் சேர்த்துக் கொண்டு, பார்ப்பனரல்லாதவர்களுக்கு என்கிற கணக்கில் ஏராளமான மலையாளிகளுக்குக் கொடுப்பதையே அவர்கள் தாராளமாக வந்து புகுவதையே பார்ப்பனர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள், அனுமதிக்கிறார்கள். அதன் காரணத்தால் ஏறக்குறைய பார்ப்பனர் அல்லாத பெரும்பதவிகளிலும் மலையாளிகளே அமர்த்தப்படுகிறார்கள்.

முதலில் சில உதாரணங்கள் கூறுகிறேன். சென்னை அரசாங்க நிர்வாகத்தின் தலைமைப் பீடாதிபதியான சீப் செக்ரட்டரி திரு. இராமுண்ணிமேனன், சீப் என்ஜினியர் திரு. கே.கே.நம்பியார் இப்படியான நீண்ட மலையாள அதிகாரிகளின் பட்டியலாகச் செல்கிறது அந்த அறிக்கை - விடுதலை அறிக்கை 17.09.1954 (பெரியார் சிந்தனையாளன் பக். 1467 ஆந்திரம் மொழிவழி மாநிலமாகப் பிரிந்த பின்னர் அதனையும் பெரியார் வரவேற்றார்.

தமிழ்நாட்டின் அரசியல், பொருளாதாரம், உத்யோகம் முதலியவைகளில் 3-இல் 2 பாகத்தை அடைந்துகொண்டு, இவை கலந்து இருப்பதால் நம் நாட்டைத் தமிழ்நாடு என்று கூடச் சொல்வதற்கு இடமில்லாமல் தடுத்துக் கொண்டு கொண்டிருக்கிறார்கள். இதை நான் ஆந்திரம் பிரிந்தது முதல் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறேன். ஆதலால் இவர்கள் சீக்கிரம் ஒழியட்டுமென்றே கருதிவந்தேன். அந்தப்படி நல்ல சம்பவமாக பிரியநேர்ந்துவிட்டார்கள். ஆதலால் நான் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன். (விடுதலை அறிக்கை 17.9.1954 - பெரியார் சிந்தனையாளன் பக்.146)

பெரியாரின் கருத்தியலைப் பின்பற்றி பாவேந்தரும் பைந்தமிழ்நாட்டின் விடுதலைக்குப் போர் முரசும் ஒலிக்கிறார். இனப்பெயர் யாதெனக் கேட்டவர்க்குத் திராவிடன் எனத் தேனாய் இனிக்கச் சொன்னவரின் இப்போதைய நிலை என்ன?

**“செந்தமிழா உன் நாட்டின் பேரென்ன செப்பென்றால்**
**இந்தியா என்றே இளிக்கின்றான் என்தாயே**
**பைந்தமிழ் நாட்டினையும் பாரதம் என்றுசொல்வான்**
**எந்தவகை இச்சேய் உருப்படுவான் என்தாயே!**

என்று நாடென்றால் அஃது தமிழ்நாடு மட்டுமே என நயம்பட உரைப்பார்.

**“அதுதான் என் ஆசை - தமிழ்**
**அன்னை அவள் முன்னைப் போலத்**
**தன்னைத்தானே ஆள வேண்டும்’**
**என்பதே அவர் ஆசையாக உள்ளது.**
**“கன்னடம் தெலுங்கு மலையாளம் களிதுளுவம்**
**முன்னடைந்து ......... மூவாது ........ முள்பகைக்கும் சோராது**
**மன்னும் தமிழ்தான் இவ்வையத்தை ஆள்களனக்**
**கன்னற் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே**

எனக் கவிஞர் குயிலுக்கே கட்டளையிடுகிறார். அதுமட்டுமன்று. தமிழிசையின் இடத்தைத் தெலுங்கிசை தாழ்த்தியது கண்டு சினந்து பொங்கும் பாவேந்தர்.

**“தெலுங்கிசைத்தால் மறுப்பீர்கள்! தமிழே பாடச்**
**செய்யுங்கள்! அதற்காகத் திரண்டெழுங்கள்**
**இலகுதமிழ் மொழியினிலே பாடல் இல்லை**
**என உரைத்தால், அறையுங்கள்’**

என்பவர், திரைப்படத்துறையில் தெலுங்கர், கன்னடர், கேரளர் ஆதிக்கம் மிகுந்து போவதையும் கண்டிக்கிறார்.

**செந்தமிழ் நாட்டில் தெலுங்குப் படங்கள்**
**தெலுங்குக் கிங்கு நடிப்பெதற்காக?**
**வந்திடும் கேரளர் வாத்திமை பெற்றார்**
**வளர்ந்திடுமோகலை அண்ணே? இங்கு**
**மாயும் படக்கலை அண்ணே**

தமிழ்ப்பாடகி எம்.எஸ். சுப்புலட்சுமி பெங்களூர் சென்றபோது அங்கு கன்னட வெறியர்களால் இழிவு செய்யப்பட்டபோது கடுஞ்சீற்றம் கொண்டு தன் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

பெரியார் ‘திராவிட நாடு’ கேட்டபோதும், ‘தமிழ்நாடு தமிழர்க்கே’ என முழங்கிய போதும் அவருடைய உள்ளம் ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மை விடுதலையைத்தான் அவாவி நின்றது. சாதியொழிந்த தமிழ்நாடுதான் எப்போதும் எண்ணமாக இருந்தது. இன்று பெரியாரை கன்னடர் என்றும் தமிழைக் காட்டுமிராண்டி மொழி எனக் காய்ந்த கன்னட இன வெறியர் என்றும் பலபேர் கழிசடைத் தனமாகப் பேசுகின்றனர், எழுதுகின்றனர். திராவிடம் பேசித் தமிழ்நாட்டையே சீரழித்த இனப்பகைவர் என்றும் அவர் பெயர்மேல் எச்சில் துப்புகின்றனர். தொண்ணூறு வயதைக் கடந்த நிலையிலும் தொண்டுக் கிழமாய் உழைத்த அவர் பணிகள் தமிழ் மக்கள் மேல் அண்டிய அழுக்குகளைக் கழுவத்தான் பயன்பட்டது என்பதை அறச்சிந்தனை கொண்ட அனைவரும் ஒப்புவார். ஆம், அவர் வழிவந்த பாவேந்தரும் அத்தகைவரே!

**அவர்தான் பெரியார்**
**தமிழர்தவம் செய்த நன்கொடை**
**தன்மானம் பாயும் தலைமேடை**
**- பாவேந்தர்**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# சங்கராச்சாரிக்கு எதிராக கழகம் ஆர்ப்பாட்டம்!



**கோவை:** காஞ்சி விஜயேந்திர சங்கராச்சாரி அரசியல் சட்டத்திற்கு எதிராக இன ஒதுக்கல் பேசியதைக் கண்டித்து கோவை உக்கடம் வள்ளியம்மை பேக்கரி முன்பு, கழகத்தின் கோவை மாநகரத் தலைவர் நிர்மல் குமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில் திராவிடத் தமிழர் கட்சியின் தலைவர் வெண்மணி, ஆதித்தமிழர் பேரவை பொதுச் செயலாளர் இரவிக்குமார், தமிழ்ப் புலிகள் கட்சி பொதுச் செயலாளர் இளவேனில், புரட்சிகர இளைஞர் முன்னணி மலரவன், Cpi ml ரெட் ஸ்டார் இனியவன், மக்கள் அதிகாரம் கணேஷ், அகில இந்திய வழக்கறிஞர்கள் சங்க மாவட்ட செயலாளர் ஜோதிக்குமார் மற்றும் தோழமை அமைப்பினரும், திராவிடர் விடுதலைக் கழக மாநகரச் செயலாளர் வெங்கட், மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், மாதவன், சதீஷ், ஸ்டாலின் ராஜா, மாணவர் கழகப் பொறுப்பாளர் நவீன், கௌதம், கதிரவன் கலந்து கொண்டனர்.

**நாமக்கல்:** குமாரபாளையம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் காஞ்சி சங்கராச்சாரி விஜயேந்திரனை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் மாலை 5 மணிக்கு தொடங்கியது.

நகரச் செயலாளர் வடிவேலு அவர்கள் தலைமை ஏற்க மு.கேப்டன் அண்ணாதுரை அவர்கள் முன்னிலையில் கண்டன முழக்கம் எழுப்பப்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வழக்கறிஞர் என் கார்த்திகேயன், காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஏ.ஜானகிராமன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சண்முகம், சக்திவேல் மொழிப்போர் தியாகிகள் நினைவுத்துவம் குழு செயலாளர் பகலவன் அவர்களும் சிறப்புரையாற்றினர். வெண்ணந்தூர், காளிப்பட்டி, ராசிபுரம், பள்ளிபாளையம், குமாரபாளையம் தோழர்களும் திராவிடர் கழகத்தின் மாவட்டத் தலைவர் ஆர்.குமார் அவர்களும், திராவிடர் கழக நகர தலைவர் சரவணன் அவர்களும் கண்டன உரையாற்றினார்கள். நிறைவாக தோழர் மோகன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். குமாரபாளையம் தோழர்கள் தங்கள் குடும்பத்துடன் பங்கெடுத்துக் கொண்டனர்.




**ஈரோடு வடக்கு:** மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் இன ஒதுக்கல் பேசும் சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி ஏப்ரல் 21 திங்கட்கிழமை காலை 10 மணி அளவில் கோபி பேருந்து நிலையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டம் மாவட்டச் செயலாளர் செல்வகுமார் தலைமையில் செகநாதன், கோபி ஒன்றிய தலைவர் கருப்பணன், டி.என்.பாளையம் ஒன்றிய செயலாளர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் நிவாஸ் வரவேற்புரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழர் உரிமைக் கழகம் பொறுப்பாளர் கந்தசாமி, நாத்திக சோதி- மாவட்ட தலைவர், வேணுகோபால்- மாவட்ட பரப்புரைச் செயலாளர், பொன்னுசாமி - ஆதித்தமிழர் பேரவை மாவட்ட செயலாளர், ரமேசு - புரட்சிகர இளைஞர் முன்னணி பொறுப்பாளர், திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் மாவட்ட தலைவர் குணசேகரன், திராவிடர் தளத்தின் பொறுப்பாளர் பெருந்துறை செந்தில்குமார், கழகத்தின் நம்பியூர் ஒன்றிய செயலாளர் ரமேசு ஆகியோர் உரையாற்றினர்.

நிறைவாகக் கழகத்தின் மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் அவர்கள் சிறப்புரையாற்றினார். கோபி ஒன்றிய செயலாளர் சூரியப்பிரகாஷ் அவர்கள் வந்திருந்த அனைத்து தோழர்களுக்கும் நன்றி கூறினார்.

ஆர்ப்பாட்ட நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தோழர்கள் மயில்சாமி, சிதம்பரம், ரகுநாதன் யாழ் திலீபன், அருளானந்தம், கலைச்செல்வன், பழனிச்சாமி, கிருஷ்ணமூர்த்தி, தமிழரசன், ஈஸ்வரமூர்த்தி, நடராஜ், திராவிடர் தளத்தின் சார்பில் விக்னேஷ், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் குரைஸ் பாத்திமா, ஷபியா, நூர்ஜகான் புரட்சிகர இளைஞர் முன்னணி சார்பில் சேகர், சண்முகம், புகழேந்தி, சோபியா, சண்முகமுடிவு, யாழினி , ஆதித்தமிழர் பேரவை சார்பில் நஞ்சப்பன், பசுபதி, பாலசுப்பிரமணி, முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

**ஈரோடு தெற்கு:** மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக இன ஒதுக்கல் பேசிய சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி 21.04.2025 காலை 10 மணிக்கு சூரம்பட்டி நான்கு சாலையில், மாவட்ட தலைவர் செல்வராஜ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் சங்கராச்சாரிக்கு எதிராக தோழர்கள் முழக்கங்களை எழுப்பினர்.




இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஜெயபிரகாஷ் (மாவட்டச் செயலாளர். பு.இ.மு), பொன். சுந்தரம் நிறுவனர்(தலித் விடுதலைக் கட்சி), சக்திவேந்தன் பொதுச்செயலாளர் (திராவிடர் எழுச்சிக் கழகம்), சாம்ராட்(திராவிடர் எழுச்சிக் கழகம்), வடிவேல் ராமன் (சமூகநீதி கட்சி), இரா. தமிழன்பன் (நிறுவனர், விடுதலை வேங்கைகள் கட்சி), கனியமுதன் (ஆதித்தமிழர் பேரவை) பெ.கிருஷ்ணமூர்த்தி, (மாவட்ட அமைப்பாளர் திவிக ஈரோடு தெற்கு), யாழ். எழிலன் (மாவட்டச் செயலாளர், திவிக ஈரோடு தெற்கு) ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கழகத்தின் மாநில அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி சிறப்புரையாற்றினார். மாநகரச் செயலாளர் மரவபாளையம் குமார் நன்றியுரை வழங்கினார். C.M நகர் பிரபு, கோபிநாத், விஜயரத்தினம், பவித்ரா, நல்லதம்பி, விக்னேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சேலம்:** மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் இன ஒதுக்கல் பேசும் சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி 21.04.2025 திங்கள் மாலை 5.00 மணிக்கு சேலம் கோட்டை மைதானத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.













ஆர்ப்பாட்டத்திற்கு சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் தோழர் சக்திவேல் தலைமை வகித்தார். சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூரியகுமார், சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் கவியரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நோக்க உரையாற்றிய தோழர்கள்: கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வி.சி.க வடக்கு மாவட்ட செயலாளர் காஜாமைதீன், ஆதித்தமிழர் பேரவை மாவட்ட தலைவர் ஏ.டி.ஆர்.சந்திரன், தமிழ்ப்புலிகள் கட்சி மண்டல செயலாளர் உதய பிரகாஷ், த.பெ.தி.க. சேலம் மாவட்ட செயலாளர் தங்கராஜ், மாரியப்பன் த.ம.மு, செல்வகுமார் CPML மக்கள் விடுதலை, இந்திய கம்யூனிஸ்ட் மாநிலக் குழு உறுப்பினர் தினேஷ், வின்சென்ட் புரட்சிகர இளைஞர் முன்னணி, கண்ணன் உழைப்போர் இயக்கம், சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் அன்பு ஆகியோர் ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் குறித்துப் பேசினர். இறுதியாக சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ் நன்றி ஆர்ப்பாட்டம் நிறைவு பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் சேலம் மாநகரம், இளம்பிள்ளை, மேட்டூர், கொளத்தூர், நங்கவள்ளி, வனவாசி, ஆத்தூர், ஏற்காடு, சிந்தாமணியூர், காவலாண்டியூர், கொங்கனாபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து கழகத் தோழர்களும் தோழமை இயக்கத் தோழர்களும் திரளாகக் கலந்துகொண்டனர்.

**திருப்பூர்:** திருப்பூர் மாவட்ட தி.வி.க. சார்பில் இன ஒதுக்கல் பேசும் காஞ்சி சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடுக்க கோரி 21.04.25 அன்று மாலை 5.00 மணியளவில் திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமையில், மாவட்டத் தலைவர் முகில் இராசு முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தி.வி.க. கார்த்திக் வரவேற்புரையாற்றினார். மாநகர அமைப்பாளர் முத்து கண்டன முழக்கங்களை எழுப்பினார். ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் குறித்து கழகத்தின் முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன் தொடக்க உரையாற்றினார்.




தொடர்ந்து கண்டன உரையாற்றியவர்கள்: மாநகர் மாவட்டச் செயலாளர் மதிமுக நாகராஜ், - இந்திய பொதுவுடைமைக் கட்சி CPI மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில், ஆதித் தமிழர் பேரவை மாநில துணைப் பொதுச்செயலாளர் விடுதலைச் செல்வன், விசிக மாவட்ட துணைச் செயலாளர் துரை வளவன், புரட்சிகர இளைஞர் முன்னணியின் கதிரவன், நவீன மனிதர்கள் குழுவின் தலைவர் பாரதி சுப்பராயன், கழகத்தின் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, மாவட்டத் தலைவர் முகில்ராசு, கழகப் பொருளாளரர் துரைசாமி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

கழகத் தோழர்கள் தனபால் மாநகரத் தலைவர் - மாரிமுத்து மாநகர துணைத் தலைவர் - மாதவன் மாநகரச் செயலாளர் - இராமசாமி தெற்கு பகுதிச் செயலாளர் - முத்து மாநகர அமைப்பாளர் - கணக்கன் மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் - தாரை செல்வராசு, தாராபுரம் அமைப்பாளர் - முத்துலட்சுமி, சிரிஜா, இரவி, அம்மாபாளையம் மோகன், இனியன் தமிழ்நாடு மாணவர் கழகம் பிரபன்யா, அனந்து ராஜ் மற்றும் உளவியல் ஆய்வாளர் தமிழ் அமுதன், திருவள்ளுவர் பேரவை அருண் லெனின் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். நிறைவாக மாநகர அமைப்பாளர் சரஸ்வதி நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : April 25, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran